புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

===========================================================================

***நீலகிரி மாவட்ட பணியர் இன மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறைகள்- பண்பாட்டியல் அணுகுமுறை***

***(Nilagir's District Tribes of Paniya's life styles- cultural aspect)***

===========================================================================

ஆய்வாளர்
**பெ.இராமகிருஷ்ணன்**
*முனைவர்பட்டஆய்வாள*
*,தமிழாய்வுத்துறை,அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*(மேனாள் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி) ,*
*குரும்பலூர்,*
*பெரம்பலூர்-621 107.*

**நெறியாளர்**
***முனைவர் நா. ஜானகிராமன்,***
*இணைப்பேராசிரியர் **மற்றும்** இயக்குநர்,*
*முதுகலை விரிவாக்க மையம்,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர்.*

===========================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

*மலைவாழ் மக்கள் இன்றளவும் மலைவளத்தைப் பாதுகாக்கக்கூடிய பாதுகாவலர்கள் ஆவர். மலைவாழ் மக்களில் பலர் இருந்தாலும் பணியர் என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக உள்ளனர். மலைவாழ் மக்கள் வாழ்கின்ற ஊர் அவர்களின் வாழ்வியல் நிலை, அவர்களின் உடலமைப்பு, ஆடை வகைகள் குறிப்பிடத்தகுந்ததாகும். ஆண்களுக்கான ஆடைகளும், பெண்களுக்கான ஆடைகளும் தனித்தனியாகவே உள்ளன. பணியர்களிடத்து சில தனித்தன்மைகள் காணப்பெறுகின்றன. அவர்களின் உணவுமுறைகளும் கல்விநிலையும் இன்றைய சமுதாய வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுவனவாகும். பணியர்கள் மேற்கொண்டுவரும் தொழில்நிலைகள் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன.பணியர்களின் உணவுக்கான தொழிலை மேம்படுத்துவதற்குப் பல வகைகளில் உழைக்கின்றனர். கசங்கு கூடை முடைதல் போன்ற*

*தொழில்களை மேற்கொண்டு வருகினறனர். பணியர்கள் பல்வேறு இசைக்கருவிகளை பயன்படுத்தி வருகின்றனர். மலைகளில் அவர்கள் வசிப்பதிற்கு ஏற்ப பாதுகாப்பு கருதியும் பொழுதுபோக்கு கருதியும் இதனை நோக்கலாம். பண்டிகைக்காலங்களில் இவர்களின் கொண்டாட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது. பணியர்கள் பயன்படுத்தக்கூடிய பாடல்களும் பழமொழிகளும் ஆய்வுக்குரியனவாகும். இவர்களின் உணவு, உடை பழக்கவழக்கங்கங்கள் ஆகியன மென்மேலும் ஆய்வுக்குரியனவாகும். இதன்வாயிலாக ஒரு சமுதாயத்தின் அடையாளத்தை வெளிக்கொணரலாம்.*

***Keywords***

***வாழ்விடம்-முதலி-வெற்றிலைப்பை-புத்தரி விழா-ஓணம்-விசு பண்டிகை-நண்டுபிடித்தல்-கசங்கு - முறம் முடைதல்- இசைக்கருவி- பழமொழி- இறைச்சி வகைகள்***

***முன்னுரை***

*தமிழகத்தில் 36-வகையான பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர். இந்த மலைவாழ் மக்கள் இன்றைய மக்களில் இருந்து முற்றிலும்; மாறுபட்டவர்களாகத் தோற்றமளிக்கிறார்கள். நாடு பல்வேறு வளர்ச்சிக்கும் பன்னாட்டுத் தொடர்புகளுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தாலும், பழங்குடியின மக்கள் மட்டும் அன்று முதல் இன்று வரை ஒரே நிலையில் தான் வாழ்ந்து கொண்டிக்கிறார்கள். காலத்தோடு மாற்றம் பெற்று வளராமல், வரலாற்றில் விடுபட்டு ஈராயிரம் ஆண்டுகளாகத் தேங்கிக்கிடக்கும் மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறைகள் குறித்துப் பல கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன. அவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***பணியர் மொழி***

*நீலகிரி மாவட்ட பணியர் இனமக்கள் தமிழும், மலையாளமும் கலந்த மொழியினைப் பேசுகின்றனர். பணியர் மொழிக்கு இலக்கணமும், இலக்கியமும் இல்லை. தமிழை விட மலையாளம் அதிகமாகப் பேசுகின்றனர். இம்மொழிகள் மட்டுமின்றி கன்னடம் மொழியும் அதிகமாகப் பேசவும் எழுதவும் செய்கின்றனர்.*

*தற்காலத்தில் இந்த இனத்தைச் சார்ந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கின்றனர். ''பணியர் இன மக்கள் பேசும் மொழி 'பணியமொழி' என்று அழைக்கப்படுகின்றது''.[1] கேரளா மாநிலத்தில் பல இடங்களில் பணியர் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதில் வயநாடு மாவட்டத்தில்,*

- *குப்பாடி*
- *கல்லுவயல்*
- *வண்ணத்தரா*
- *அம்பலகுன்னு*
- *மாடக்காரா*
- *கல்லுமூக்கு*

*போன்ற இடங்களில் பணியர்கள் வசித்து வருகின்றனர்.*

***பணியர் வாழ்கின்ற ஊர்கள்***

*தமிழகத்தில் பணியர் இனமக்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் பகுதிகளில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். அடர்ந்த காட்டுப் பகுதிகளில் தனித்தும், ஒருவரோடு ஒருவர் சேர்ந்தும் வாழ்கின்றனர். தற்காலத்தில் தாங்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப பல இடங்களில் பணியர்கள் வாழ்கின்றனர். கூடலூர் தாலுக்காவில் பாடந்துரை, நம்பாலக்கோட்டை, கவுண்டங்கொல்லி, ஆலவயல், ஏழுமரவயல், காமராஜ் நகர், ஆருட்டுபறை, எருமாடு, முள்ளன்வயல், கோத்தர் வயல், கம்பட்டி, ஆத்திக்குன்னா, மன்வயல், முதுமலை, உப்பட்டி, செட்டிவயல், பந்தலூர் தங்கமலை, செம்மண் வயல், ஆத்தி பள்ளி, புறமன்னவயல், காரியசோலை, மங்கரா, வெள்ளரி, பூதமூலா, நெலாக்கோட்டை, இரும்புபாலம், கோழிக்கொல்லி, வாழவயல், அட்டிக்கொல்லி, ஏரோடு, கைதக்கொல்லி,*

அத்திமாநகர், பொன்னூர், பன்னிக்கொல்லி, சோலமலை, சேலக்குன்னா, காரமூலா, சேலக்குன்னு, மேபீல்டு, பணியர் காலனி, பிதர்காடு கொய்னாகுன்னு, தானிமூலா, கடலைக்கொல்லி, விலங்கூர், பெரும்பள்ளி, பந்தகாப்பு, கூவச்சோலை, காந்திக்குன்னு, முதிரக்கொல்லி, சோலாடி, சந்தனக்குன்னு, பலாப்பள்ளி, குந்தலாடி, புத்தூர்வயல், ராக்வுட் எமரால்டு, பாக்கனா, கல்லட்டி, கூவமூலா, காந்திநகர், தொரப்பள்ளி, அள்ளர், ஏழமரம், ஓவேலி, எல்லமலை, மூலக்காடு மேபீல்டு, கரிசனங்கொல்லி போன்ற இடங்களில் பணியர் இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

***பணியர்களின் வாழ்க்கை நிலை***

*பணியர் இன மக்கள் அன்றாட வாழ்க்கையை வாழ்ந்து வருபவர்கள். எதிர்காலத்திற்கு என்று ஒன்றும் சேமித்து வைக்க மாட்டார்கள். வேலை செய்து கிடைக்கும் பணத்தினைக் கொண்டு வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவர். மீதி இருக்கும் பணத்தை மதுபானம் குடிப்பதற்கு செலவுசெய்கின்றனர். குடும்பத்தில் உள்ளவரிடம் அடிக்கடி இவர்கள் சண்டை போடுகிறார்கள். ஒரு சில பெண்களுக்கும் குடிக்கும் பழக்கம் உண்டு. முற்காலத்தில் பணியர்கள் மவுண்டாடன் செட்டி சமூகத்தினரிடம் விவசாயம் செய்து தங்களது வாழ்க்கையை கழித்து வந்தனர். புலிகள் காப்பக வனப்பகுதியை ஒட்டி பணியர் இனமக்களின் குடியிருப்புகள் உள்ளதால் ஊராட்சி பகுதியில் வளர்ச்சி பணிகள் செய்ய வனத்துறை தடை விதித்துள்ளது. இதனால், மின்சாரம், சாலை, குடிநீர், தெருவிளக்கு, உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி உள்ளனர். ஊராட்சி மூலம் சூரிய சக்தி தெருவிளக்குகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பொருத்தப்பட்டது. அதுவும் போதிய பராமரிப்பு இல்லாததால் பழுதடைந்து உள்ளது. இதனால், மண்ணெண்ணெய் விளக்குகளின் ஒளியால்தான் வாழ்ந்து வருகின்றனர்.*

***முதலி***

*'முதலி' என்பவர் பணியர்கள் வாழும் பகுதிகளுக்கு 'தலைவன்'. 'மக்களின் கடவுள்' போன்று தன்னை நினைப்பவன் முதலி ஆவான். "பண்டைய காலத்தில் வயநாடு செட்டி, மவுண்டாடன் செட்டியாரிடம் மிகவும் பற்று உடையவராகவும், தெய்வபக்தி உடையவராக இருப்பார். மவுண்டாடன் செட்டியார் வாழும் இடங்களில் பணியர்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். பணியர் குடும்பங்களில் வயதில் பெரியவர் ஒருவரை தேர்ந்தெடுத்து அவருக்கு முதலி பதவியை கொடுத்து வெள்ளியால் செய்த ஒரு வளையல் வழங்குவர்கள். பணியர்களின் சமுதாயச் சடங்குகளில் முதலி கலந்து கொள்வதை அவர்கள் விரும்புகின்றனர். பொதுவான நிலச்சுவான்தார்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையிலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் முதலி உதவியை பணியர் இனமக்கள் நாடுகின்றனர்."[2]*

***பணியர்களின் உடலமைப்பு***

*நீலகிரி மாவட்டத்தில் வாழும் பணியர் இனமக்கள் கருப்பு நிறமுடையவர்கள். நடுத்தர உயரமும், தட்டையான மூக்கும் உடையவர்கள். உடற்கட்டு பொருந்தியவர்கள். பெரும்பாலும் எல்லாப் பணியர்களின் தலைமுடியும் சுருண்டும் தலைவாரப்படாமலும் இருக்கும். பணியரினப் பெண்களின் தலைமுடி சுருண்டும் தோள் பட்டைக்கு கீழ் வளராமலும் வினோதமாகக் காணப்படும்.*

***பணியர் இன மக்களின் ஆடைகள்***

*பழங்கால மனிதர்கள் இலைகளையும், தழைகளையும், மரப்பட்டைகளையும் கொண்டு தங்கள் உடலை மூடிக்கொண்டனர். இதன் மூலம் வி~ப்பூச்சிகள், வண்டுகளால் தமக்குத் தொல்லை ஏற்படாமல் இருக்கவும், குளிர், வெப்பம் போன்ற தட்பவெப்ப நிலையின் கொடுமைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும் எனக் கருதினர். உடைகள் மானத்தைக் காப்பதற்கும், உடல்நலத்தைப் பாதுகாக்கவும், மற்றவர்களிடமிருந்து இனம் பிரித்துக்காட்டவும் ஆடைகள் பயன்படுகின்றன.*

**ஆண் ஆடைகள்**

*பண்டைய காலம் முதலே ஆண்கள் முண்டினை (முண்டு என்பது ஆடையைக் குறிக்கக் கூடிய சொல்) அணிகின்றனர். தோளில் சட்டை அணிவதும் முண்டு முழங்காலுக்கு கீழ் இறங்காமலும் அணியும் வினோதமானப் பழக்கம் காணப்படுகின்றது. நடுத்தர உயரமாகவும் உடல் ஆரோக்கியத்துடனும் இருப்பார்கள். வேலைக்கு செல்லும் போது கத்தியை இடுப்பில் சொருகி வைத்து இருப்பார்கள்.*

**பெண் உடைகள்**

*பணியர் இன "பெண்கள் முழங்கால்கள் வரை தொங்கும் வெள்ளை ஆடையை மார்பகத்திற்கு மேல் சுற்றி கட்டிக் கொள்வார்கள். இடுப்பைச் சுற்றி 5அங்குலம் அகலத்தில் 7 அங்குல நீளத்தில் சிவப்பு அல்லது கருப்பு நிறத்தில் 'கயிறு' அல்லது 'ருடைன்' என்று சொல்லக்கூடிய துணிகளை அணிகின்றனர். பெண்கள் வெளியிடங்களுக்கு வரும் போது வெள்ளை துணியால் மார்பகங்களை மூடி தோள் பட்டையை மூடாமலும் வருவார்கள். கருப்புத் துணியை இடுப்பில் பெல்ட் போன்று அணிகின்றனர். பெண்கள் பண்டைய காலத்தில் பனை ஓலையை சுருள் போன்று வளைத்து காதணியை செய்து அதன் உள்பாக்கத்தில் மஞ்சாடி குருவை பதிய வைத்து காதில் காதணியாக அணிந்துள்ளனர். இது பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும், சிவப்பு நிறத்திலும் காணப்படும். பெண்கள் கழுத்தில் பாசி மற்றும் **25** பைசா **50** பைசா நாணயங்களை மாலையாகச் செய்து கழுத்தில் அணிந்து கொள்கின்றார்கள்."[3] ஆடைகளின் மாற்றம் நகரத்து மக்களுடன் கொண்ட தொடர்பினாலும், திரைப்படங்களைப் பார்ப்பதனால் ஏற்பட்ட தாக்கத்தினாலும், பணியர் இனமக்கள் இப்பொழுது நகரத்து மக்களைப் போல ஆடை உடுத்துகின்றனர். பணியரின ஆண்கள் தூய்மையான வேட்டிகள், கைலிகள், சட்டைகள், பேன்ட்கள், பணியன்கள் அணிகின்றனர். பெண்கள் தூய்மையான சேலைகள், ரவிக்கைகள், சுடிதார், மிடி, நைட்டி அணிகின்றனர். அரசு மூலம் தரும் இலவச வேட்டிகள், சேலைகளையும் பெற்றுக் கொள்கிறார்கள்.*

**பணியர்களின் தெய்வங்கள்**

*படிப்பறிவு இல்லாதவர்களாக இருந்தாலும் பணியர்கள் தங்களுக்கெனத் தனிப்பட்ட தெய்வ நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். பணியர்கள் பொதுவாக பேய் பிசாசுகளை அதிகமாக நம்புகின்றனர். பணியர்களின் குலதெய்வமாக காட்டு பகவதி அம்மன் என்ற தெய்வம் விளங்குகின்றது. மேலும்,*

- *குலியன்*
- *காளி*
- *வேட்டைக்கார சாமி*
- *அம்மன்*
- *தேவி*
- *விஷ்ணு*
- *சிவன்*
- *கணபதி*

*போன்ற தெய்வங்களையும், மேலும் மரத்தினடியில் ஒரு கல்லை வைத்து தெய்வமாகவும் வழிபடுகின்றனர். அத்தெய்வத்திற்குக் 'குலி' என்று பெயர். இத்தெய்வமே மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக பணியர்கள் கருதுகின்றனர்.*

**வழிபடும் பொருட்கள்**

*பழங்குடியின பணியர்கள் தங்கள் வசதிக்கேற்ப பொருட்களை வாங்கி சாமிக்கு வழிபாடுகள் நடத்துகின்றனர். அவை,*

- *சூடம்*
- *சந்தனம்*
- *அவில்*
- *விபூதி*
- *கரிப்பொடி*

- *மஞ்சள்*
- *தேங்காய்*

*போன்றவைகளைப் பயன்படுத்தி தெய்வத்தை வணங்குகின்றனர்.*

***பணியர்களின் உணவுமுறைகள்***

*உயிர் வாழ்வதற்கும் உடல்நலத்திற்கும் உணவு அவசியம். தினமும் வேலை செய்வதற்கு வேண்டிய சக்தியைக் கொடுப்பது உணவாகும். நமது உள்ளத்திற்கும், உடலுக்கும் வேண்டிய வலிமையை, வளர்ச்சியைக் கொடுப்பது உணவாகும். உணவின் அவசியத்தை*

*"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"[4]*

*"உண்டி முதற்றே உணவின் பிண்டம்"[5]*

*என்ற அடிகள் உணர்த்தும். உணவு என்பது வாழும் உயிரினங்களால் உட்கொள்ளப்படும் திடமான மற்றும் நீர்மப் பொருட்களைக் குறிக்கும். விலங்குகள் தங்கள் வளர்ச்சிக்குத் தேவையான சத்துகளையும் வேலை செய்வதற்குத் தேவையான ஆற்றலையும் உணவிலிருந்தே பெறுகின்றன. இவை பொதுவாக தாவர மற்றும் விலங்கு மூலத்தில் இருந்தே பெறப்படுகின்றன. பணியர்களின் முக்கிய உணவு அரிசிக் கஞ்சியாகும். பழங்காலங்களில் இவர்கள் கடையில் சென்று உணவுப் பொருட்களை வாங்கமாட்டார்கள். நெல்லினை அவர்களே உரலில் குத்தி சமைத்தும், மலைப்பகுதியில் விளைகின்ற மூங்கில் அரிசியையும் உரலில் குத்தி பலா மரத்தின் இலையை கரண்டியாக செய்தும் சீனி மிளகாயை சேர்த்து உண்கின்றனர்.*

*இவர்கள் வேட்டைத் தொழிலால் கிடைக்கும் பன்றி, முயல், மான், குருவி, மலையாடு, காட்டுக்கோழி, கொக்கு ஆகியவற்றின் இறைச்சியை உண்கின்றனர். இவை மட்டும் இல்லாமல் இயற்கையாகக் கிடைக்ககூடிய கீரைவகைகள், காளான்கள், கிழங்கு வகைகள், பலாப்பழம், மீன், நண்டு, போன்றவற்றையும் சமைத்து உண்கின்றனர். பெரும்பாலான பணியர் இனமக்கள் பட்டினிக்கிடப்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை. இவர்கள் கூலி வேலை அதிகமாக செய்வதால் உணவை பெரும் பொருட்டாக கருதுவதில்லை.*

***பணியர் குழந்தை உணவு***

*பணியர் இன குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் வரை தாய்ப்பாலும், பல் முளைத்ததும் இயல்பாகக் கிடைக்கக்கூடிய சுட்டமீன், சுட்ட நண்டு போன்ற கடல் வாழ் உயிரினமும், கிழங்கு வகை உணவான மரவள்ளிக்கிழங்கு, பனங்கிழங்கு போன்றவையும், பயிறு வகை உணவான முந்திரிப்பயறு, மணிலாப்பயிறு, துவரம்பயிறு, பைத்தம் பயிறு போன்றவையும், காய்கறி வகையான மாங்காய், பலா மூசு, வெள்ளரிக்காய் போன்றவையும், இவை தவிர மூங்கில் அரிசி சோறு, முட்டை போன்றவையும், கையில் கிடைக்கும் கனிவகைகளாக புளியம்பழம், வேப்பம்பழம், முந்திரிப்பழம், நாவல்பழம், மலை நெல்லிப்பழம், பலாப்பழம், கொளஞ்சிப்பழம் போன்ற பழவகைகளையும், உடும்புக்கறி, முயல்கறி, அணிப்பிள்ளை, ஆமைக்கறி, காக்கைக்கறி என்று அவர்கள் உண்ணக் கூடிய கறிவகைகளும், பழைய கூழ் போன்ற உணவுகளையும் குழந்தைகளுக்குக் கொடுக்கின்றனர்.*

***கல்வி நிலை***

*தனி மனிதனுடைய வாழ்வையும், நாட்டின் வாழ்வினையும் உயர்த்துவது கல்வியாகும். அத்தகு கல்வியால் ஏற்றம், ஒழுக்கம், பண்பாடு போன்றவை வளர்க்கின்றன. கல்வி கற்பதன் மூலம் நமது அறியாமை நீங்கிச் சிந்தனை வளர்கிறது. வள்ளுவரும் கற்றவரே கண்ணுடையவர் என்றும், கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்களையுடையவர் என்றும், கல்லாதவர் விலங்கிற்குச் சமம் என்றும் கூறுகிறார்.*

*"கல்வி அழகே அழகு"[6] (பாடல் எண் - 131)*

*"கற்றலின் வாய்த்த பிறப்பு இல்லை"[7] (பாடல் எண் - 29)*

*என்னும் பாடலடிகளும் கல்வியின் சிறப்பை விளக்கும். "பணியர் இனமக்களின் குழந்தைகள் பெரும்பாலும் அதிகமாகப் படிப்பதில்லை. ஒரு சில பெண் அல்லது ஆண் குழந்தைகளும் பன்னிரெண்டாம் வகுப்பு வரை தான் படித்துள்ளனர். பெரும்பாலும் எங்கள் பணியர் இனத்தில் பத்தாம் வகுப்பைத் தாண்டியதில்லை. காரணம் அதற்கு மேல் படிக்க*

*வேண்டுமென்றால் வேறு ஊர்களுக்குச் செல்லவேண்டும். தற்போதுதான் எங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்றோம்.'' அரசாங்கம் ''எங்களுக்கு எவ்வளவுதான் வாய்ப்புகள் கொடுத்தாலும், அவை எங்களை வந்து சேர்வதில்லை. யாரும் எங்களுக்குத் தெரிவிப்பது கிடையாது. பெண்கள் வெளியூர் சென்று படிக்க விரும்பமாட்டார்கள். அவர்கள் பிறர் தங்களை கேலி பண்ணுவதாகக்கூறி படிப்பைப் பாதியில் நிறுத்திக் கொள்கின்றனர். பிறகு பள்ளிக்குப் போகவில்லை என்று கூறி நின்றுவிடுகின்றனர். தற்பொழுது தான் எங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பி வருகின்றோம்.''* [8]

*பழங்குடியினருக்கான உண்டு உறைவிடப்பள்ளி இருந்தாலும், அங்கு தங்கள் பிள்ளைகளை அனுப்ப பணியர் இனமக்கள் அச்சப்படுகின்றனர். இதற்கு காரணம் தங்கள் பிள்ளைகளை அடிமைபோல் நடத்திவிடுவார்களோ என்ற அச்சம் தான் காரணம். பணியர்களின் கல்வி பிரச்சனைகள் பழங்குடி பணியர் இனமாணவர்கள் கல்வி கற்பதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். மலைப்பகுதியில் பள்ளிகள் தொலைவில் உள்ளதாலும், பள்ளிக்குச் செல்வதற்கான மலைப்பாதை சிதைவடைந்து காணப்படுவதாலும், சரியான நேரத்தில் பேருந்து வசதி இல்லாததாலும் சரியான நேரத்திற்குப் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. இதன் காரணமாகவும், வனவிலங்கு நடமாட்டம் காரணத்தாலும், ஒரு சில இடங்களில் போதுமான அளவிற்கு மின்சார வசதி இல்லாத காரணத்தாலும், மலைப்பகுதியில் உள்ள பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பெரும்பாலான இடங்களில் ஆசிரியர் பற்றாக்குறையினால் முழுமையாகப் பாடம் நடத்துவதில்லை. இதன் காரணமாகவும் கல்வியில் பிரச்சனை காணப்படுகின்றது.*

**வெற்றிலைப்பை**

பணியர் இனமக்களிடம் வெற்றிலைப் போடும் பழக்கம் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை காணப்படுகின்றது. ''இவர்கள் உணவு இல்லாமல் கூட இருந்து விடுவார்கள். ஆனால் வெற்றிலை இல்லாமல் இருக்க மாட்டார்கள். இம்மக்கள் ஒரு நாளைக்கு பலமுறை வெற்றிலை போடும் பழக்கம் கொண்டவர்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை, மது போன்றவைகள் இல்லாமல் இருக்கமாட்டார்கள். இவர்கள் வெற்றிலையை துணிப் பையில் போட்டு இடுப்பில் சொருகிக் கொள்வார்கள். இவர்கள் கடுமையான வேலை செய்யும் போதும், சோர்வைப் போக்குவதற்கும், நாக்கின் வளத்தைப் பெறவும், நோய் எதிர்ப்பு சக்தி பெறவும் வெற்றிலைப் போடுகின்றனர்.'' [9]

***புத்தரி திருவிழா(நெல் அறுவடை)***

*மலை மாவட்டமான நீலகிரி மாவட்டம் தேயிலைக்குப் பெயர் பெற்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால், இம்மாவட்டத்திலுள்ள சில சமவெளிப்பகுதிகளில் நெல் சாகுபடி செய்யப்படுவதே பெரும்பாலானோருக்குத் தெரியாது. ''நெல் அறுவடை விழாவினை பணியர் இனமக்கள் ஐப்பசி மாதத்தில் நடத்துகின்றனர். இவ்விழாவின் போது பணியர்கள் காலையில் நீராடிவிட்டு ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் பெரியவர் ஒவ்வொருவரும் சென்று அவர் அவர் நிலத்தில் அல்லது 'மவுண்டான் செட்டியார்' நிலத்தில் விளைந்த நெற்கதிரை கொஞ்சம் அறுத்து வந்து வீட்டில் உள்ள கூரைகளில் சொருகி வைப்பர். பின்னர் இதற்காக அறுக்கப்பட்ட கதிர்களை புத்தூர்வயல் பகுதியிலிருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் வரை தலையில் சுமந்து மேளதாளம் முழங்க நடனமாடி ஆயிரக்கணக்கான பழங்குடி மக்கள் ஊர்வலமாகச் சென்று நம்பாலக்கோட்டையில் உள்ள வேட்டைக்காரன் சாமி கோயிலுக்குச் சென்று முதற்பயிரை கடவுளுக்குப் படையல் இடுகின்றனர். இந்த பாரம்பரியத் திருவிழாவைக் காண ஏராளமான பார்வையாளர்களும் இதில் கலந்துகொள்கின்றனர்.''* [10]

**ஓணம் பண்டிகை**

*பணியர் மக்களின் முக்கியமான பண்டிகை ஓணமாகும். இதைப் போன்றுதான் மலையாள மக்களின் முக்கியப்பண்டிகையும் திரு ஓணமாகும். மஹாபலி ஆண்டிற்கு ஒருமுறை எல்லா மக்களையும் பார்க்க வருகின்ற நாள் தான் ஓணம் பண்டிகை. இந்நாளன்று பணியர்கள் வாசலில் பூக் கோலம் இட்டு கொண்டாடுகின்றனர். பணியர் மக்கள் ஓணம் அன்று செங்காந்தள் பூவினைக் கோவிலுக்கு எடுத்துச் சென்று வழிபாட்டிற்குக் கொடுத்து மறுபடியும் அதே பூவினைப் பெற்று 'மவுண்டான் செட்டியார்' இன மக்களுக்குக் கொண்டு போய் கொடுப்பர்கள். பண்டிகை அன்று அவர்கள் வீட்டில் ஓணம் கொண்டாடும் பொழுது*

*செட்டியார் வீட்டு வாசலில் நின்று வணங்கிய பின்னரே உணவு உண்பர்கள். இவ்விழாவினைப் பணியர் இனமக்கள் காலகாலமாக கொண்டாடி வருகின்றனர்.*

**விசு பண்டிகை**

*மலையாள மாதம் 1-ஆம் தேதியினையும், தமிழ் மாதத்தில் சித்திரை 1-ஆம் தேதியினையும் பணியர் இனமக்கள் விசு பண்டிகையாக கொண்டாடுகின்றனர். பண்டிகை அன்று விடியற்காலையில் விசு கனியை காணும் நாள் விசு பண்டிகையாகும். "விசு அன்று கொன்றைப் பூவை பணியர் மக்கள் கோவிலுக்கு எடுத்துச் சென்று வழிபாடு செய்த பின், மவுண்டான் செட்டியார் வீட்டிற்குப் பூவினைக் கொடுக்கின்றனர். பிறகு கடவுளை வணங்கியும் பட்டாசுகள் வெடித்தும்" பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.*[11]

**கூடை, முறம் மெழுகுதல்**

*பணியர்கள் கூடை, முறம் போன்றவற்றைப் பின்னி விற்றபிறகு சிலர் கூடை, முறம் போன்றவை பிசிர் இல்லாமல் இருக்க வேண்டும் என்று கருதி அவற்றை மெழுக வேண்டும் என்று கூறுகின்றனர். "கூடை, முறம் மெழுக யாராவது அழைத்தால் இவர்கள் ஏற்கனவே பழைய காகிதங்களைச் சிறு, சிறு கூறுகளாகக் கிழித்துப் போட்டு அவற்றை இரண்டு நாட்கள் குளிர்ந்த நீரில் நன்கு ஊறவைத்து அதே போன்று வெந்தயத்தையும் ஊறவைத்து காகிதம், வெந்தயம் இரண்டையும் நன்கு அறைத்து வைத்திருந்த சாந்தினைக் கொண்டு கூடை, முறம் இவற்றை மெழுகிக் கொடுத்துவிட்டு அதற்குண்டான கூலியைப் பெற்றுச் செல்வார்கள். பெரும்பாலும் கசங்கு (ஒரு வகைப் பிரம்பு) கூடைகளையும், முறங்களையும் மட்டுமே மெழுகுவர். நொச்சிக் கூடைகளை மெழுகுவது கிடையாது."*[12]

**விறகு வெட்டுதல்**

*பணியர் பழங்குடியின மக்கள் மலைபகுதியில் கிடைக்கின்ற மரத்தை வெட்டுவதை ஒரு தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலத்தில் வளர்ந்திருக்கக் கூடிய யூகலிப்ட்டஸ், சவுக்குமரம், முள்மரம் போன்றவற்றை வெட்டி அவற்றை விறகிற்காகப் பிற இனமக்களிடம் விற்று வருகின்றனர். இந்தத் தொழில் வேட்டைத் தொழிலில் வருமானம் கிடைக்காத சூழலில் செய்யக்கூடிய தொழிலாக அமைகின்றது.*

**கசங்கு கூடைகட்டுதல்**

*கசங்குகளைக் கொண்டு கூடை கட்டுவதைக் கசங்கு கூடைகட்டுதல் என்று கூறுகின்றனர். "பணியர்கள் அதிகாலையில் கத்தியை எடுத்துக்கொண்டு அடர்ந்த காட்டுப் பகுதிக்குச் சென்று 'ஈச்சமுள்' என்ற தாவரத்தின் தண்டுகளை சேகரித்துக்கொண்டு வருகின்றனர். இவ்வாறு சேகரித்த தாவரத் தண்டுகளைக் கசங்கு என்கின்றனர். கசங்கு ஈரப்பதம் உடைய தண்டு பகுதியை காய வைத்து ஒரு கட்டாகக் கட்டி வைத்துக் கொள்கின்றனர். கூடைகட்டும் போது தேவைப்படும் அளவு தண்ணீர் எடுத்துத் தெளித்துத் தேவையான பக்குவத்திற்குத் தயார் செய்து கொண்டு ஒவ்வொரு கசங்கையும் இரண்டாகக் கிழித்து அதன் ஓரங்களை நன்கு சீவி, கூடை பின்னுகின்றனர். இந்தக் கூடைகள் குப்பைகள் அள்ளுவதற்கும், தானியங்களை வெயிலில் காய வைக்கவும் பயன்படுகின்றன."*[13]

**நண்டு பிடித்தல்**

*நீலகிரி பகுதியில் அதிகமான நீர் நிலைகள் மற்றும் ஊற்றுப் பகுதிகள் காணப்படுகின்றன. மக்கள் நடமாட்டம் இல்லாத காடுமேடுகளில் வாழும் நண்டுகளைப் பிடித்தும் அதனை வெண்நீரில் போட்டு சுத்தம் செய்து அம்மியில் அரைத்து அதன் சாற்றை எடுத்து ரசம் வைக்கின்றனர். இதைக் குடித்தால் சளித் தொல்லை நீங்கும். உடல் சோர்வு நீங்கும் என கருதுகின்றனர். மணலின் அளவைக் கொண்டு நண்டின் அளவை அறிகின்றனர். பின்னர் அந்த மண்ணைக் கையால் அள்ளிப்பார்த்து மண்ணின் கதகதப்பைக் கொண்டு நண்டு உள்ளிருக்கும் ஆழத்தைக் கணக்கிடுவர்.*

*எனவே மண்ணின் கதகதப்பை உணர்ந்து நண்டு உள்ளே இருப்பதை அறிந்து வளைக்கு ஏற்றாற்போல் இரண்டு கைகளாலும் முதலில் அகலமான பள்ளத்தை எடுத்து, பின்னர் ஆழம் செல்லச் செல்ல வலது கைகளால் மட்டும் மண்ணைத் தோண்டிக் கொண்டு சென்று நண்டு கையில் சிக்கியதும் சற்று மண்ணோடு சேர்த்து அள்ளிக்கொண்டு வளையின் மேற்புறம் கொண்டு வருகின்றனர். நண்டினை அழுத்திக் கொண்டு கால் கொடுக்கின் இரண்டு முள்களில் பெரிய முள்ளின் அடிப்பகுதியில் சிறிய முள்ளை உடைத்துச்*

*செருகுகின்றனர். பிறகு அந்த நண்டைப் பைக்குள் போட்டுக் கொள்கின்றனர். நண்டு பிடிக்கும் போது பாடல் பாடியும் சோர்வு தெரியாமலும் நண்டினை பணியர் இனமக்கள் பிடிக்கின்றனர்கள்.*

*"குள்ள குள்ள நண்டே*
*கூடலூரு நண்டே*
*வட வட நண்டே*
*ஓடி வாடா நண்டே*
*கல்லினிலே நண்டே*
*கல்யாணத்திலே போகண்டே*
*முனு துணி வாங்கண்டே*
*முண்டாதங்கே போகுண்டே*
*குரங்கச்சா குரங்கச்சா*
*தாலி ஒன்னு மீட்டட்டும்*
*பண்டுகால் பணியம் போயல்ல*
*ரோமங்களும் இட்டட்டும்*
*தனனநே நானே தனானே நானே*
*தனனநே நானே தனானே நானே*
*தோட்டம் நல்ல தோட்டம்*
*சேரம்பாடி தோட்டம்*
*தோட்டத்துல பணியெடுக்கன*
*கிளிவி மாரை நோட்டம்*
*தனனநே நானே தனானே நானே*
*தனனநே நானே தனானே நானே"*[14]

***சண்டை***

*"பணியரின மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தாலும், இவர்கள் மது அருந்திய பின்னர் தினசரி கணவன், மனைவியிடையே சண்டை ஏற்படும். மேலும், இவர்களது சண்டையில் மிருகத்தனம் அதிகமாகக் காணப்படுகின்றது. கணவன் மனைவியைப் பலமாக அடித்து கிடத்திவிட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு மனைவிக்குக் கள்ளு, சாராயம் வாங்கிக் கொடுத்து வலியைக் குணப்படுத்துவது உண்டு. ஆனால் மனைவி கணவனை பலமாக அடித்துப் போட்டு விட்டால் அவ்வாறு செய்வது கிடையாது. ஒரு குழுவில் உள்ளவன் பிறிதொரு குழுவில் உள்ள பெண்ணிடம் விருப்பம் இல்லாமல் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்தால் இரண்டு குழுவினரும் கரடு முரடாக அடித்துக் கொண்டு கை, கால், மண்டை உடைவதுடன், சில நேரங்களில் இறப்பும் ஏற்படுகின்றது. இவ்வாறு விலங்குகள் போல் இரக்கமில்லாமல் சண்டைபோட்டுக் கொள்வது அடிக்கடி நடைபெறுகின்றது."*[15]

***பணியர்களின் இசைக்கருவிகள்***

*இன்றைய நாகரிக வளர்ச்சியிலும் கூட தங்களுடைய பாரம்பரியமிக்க இசைக் கருவிகளைத் தங்களுடைய வாழ்க்கைச் சடங்குகளில் முறையாக இசைத்து வருகின்றனர். மக்களின் உணர்வுகள் இசைக் கருவிகளின் வழியேயும் வெளிப்படுவது இயல்பு. இசைக் கருவிகளின் வடிவங்களுக்கு ஏற்ப ஒலிப்பு முறைகளில் வேறுபாடு கொண்ட இசை வகைகள் அமையும். கொகாலு என்று சொல்லக்கூடிய ஊதுகுழல் முதன்மையான இசைக்கருவியாகக் கருதப்படுகிறது.*

***இசைக் கருவிகளின் வகைகள்***

- *துடி (மத்தளம்)*
- *மங்கை*
- *தவில்*
- *பொரெ*
- *கொகாலு*

*இவையே இவர்களின் இசைக்கருவிகளாகும்.*

***பழமொழிகள்***

*பொதுவாக பழமொழிகள் ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாகப் புழக்கத்திலிருந்து வரும் அனுபவக் குறிப்புகள் ஆகும். பழமொழிகள் அச்சமுதாயத்தினரின் அனுபவ முதிர்ச்சியையும், அறிவுக் கூர்மையையும் சிறந்த முறையில் எடுத்து விளக்குவதாக அமைகின்றன. இவை நாட்டுப்புறவியலின் ஒரு அங்கமாக அமைகின்றன. பழமொழியின் தன்மை குறித்து "தினந்தோறும் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களின் திரட்டே பழமொழியாகும். இவ்வகையான பழமொழிகள் அனுபவத்தின் அடிப்படையில் எழுந்தவை. அறிவின் சுருக்கமே பழமொழி என குறிப்பிடலாம். வாழ்க்கையில் உயிர்ப் பண்பும், உணர்வுப் பண்பும், அறிவுப் பண்பும் பழமொழிகளில் கருவாக அமைந்து வாய்மொழி இலக்கியங்களில் சிறந்ததொன்றாகக் கருதப்படுகின்றன"[16] என்று சு.சக்திவேல் குறிப்பிடுகின்றார். பழமையான வரலாற்றினையும், நம்பிக்கைகளையும், பண்பாட்டினையும், மனித உணர்வுகளையும் காட்டுபவை பழமொழிகளாகும். பழமொழிகள் உலகிலுள்ள அனைத்துச் சமுதாயங்களுக்கும் பயன்படுகின்றன.*

***பழமொழியால் அறியலாகும் செய்திகள்***

*பழமொழிகளால் பல வகையான பண்பாட்டுக் கூறுகளான சாதி, சமயம், மொழி, பறவை, உறவுமுறைகள், மிருகங்கள், இயற்கை, குடும்பம், நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், தத்துவம், பொருளாதாரம், வானிலை, சகுனங்கள், மருத்துவ நம்பிக்கை, வேளாண்மை, திருமணம் போன்றவை பற்றி அறியலாம்.*

***பணியர் பழமொழி***

*1. இல்லை இல்லைன்னு சொன்னா*
*வீட்ல பிலிகூட தங்காது.*
*2. கோழி நினைக்குமாம்*
*நாம் கூவுவதால் தான்*
*பொழுதே விடிகிறதென்று.*
*3. மச்சான் துணையிருந்தா*
*மலையும் ஏறிடலாம்.*
*4. வாதத்திற்கு மருந்து தரலாம்*
*பிடிவாதத்திற்கு மருந்து தரமுடியுமா?*
*5. கல்லை விட்டெறிந்து பார்ப்போம்*
*விழுந்தா பழம் இல்லேன்னா கல்.*

***பணியர்களின் விடுகதைகள்***

*1. ஓடறவனுக்கும் தொங்கறவனுக்கும்*
*ஒரே நாள்ல கல்யாணம் - அது என்ன?*
*விடை: மீன் குழம்பு*
*2. செப்பு நிறைய முத்து - அது என்ன?*
*விடை: பல்*
*3. காடு மேடெல்லாம் போவான்*
*எல்லா போயி வந்தாலும்*
*தண்ணி குடிக்கமாட்டான் - அவன் யார்?*
*விடை: செருப்பு*
*4. கழுத்துண்டு தலையில்லை*
*கையுண்டு காலில்லை*
*இடுப்பு வயிறு உண்டு*
*குடல் இல்லை - அவன் யார்?*
*விடை: சட்டை*
*5. வாராடியம்மா சூதாடி வாரா*
*வடுவட்டியம்மா விடுவிச்சு வாரா - அது என்ன?*
*விடை: சீப்பு*
*6. ஆரம்பம் ஆவது தண்ணிக்குள்ளே*
*ஆடி அடங்குது ஒயருக்குள்ளே - அது என்ன?*
*விடை: கரண்டு*

*7. ஒட்டுத் திண்ணையிலே தடுக்குப் போட்டேன்*
*எடுக்க முடியவில்லை - அது என்ன?*
*விடை: கோலம்*

***இறைச்சி வகை***

*பணியர் இனமக்கள் அடர்ந்த காட்டுப்பகுதிகளில் வேட்டையாடிய முயல், உடும்பு, காட்டுப்பூனை, கீரிப்பிள்ளை, காட்டுக்கோழி, மான், போன்றவற்றின் இறைச்சிகளைப் பிற இனமக்களுக்கு விற்கவும், தங்களது உணவுக்கும் பயன்படுத்துகின்றனர். கொக்கு, நாரை, கௌதாரி, காகம், வாத்து, மரங்கொத்தி, குருவி போன்ற பறவைகளைக் உண்டிவில் கொண்டு அடித்து வேட்டையாடி தங்களது உணவிற்கு பயன்படுத்துகின்றனர். இவை மட்டுமின்றி நீர் நிலைகளில் கிடைக்கக் கூடிய நண்டு, மீன் போன்றவற்றை பிடித்துச் சமைத்துச் சாப்பிட்டு வாழ்ந்துவருகின்றனர்.*

***கீரை வகைகள்***

*பணியர்கள் இறைச்சி உணவிற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். வேட்டையில் விலங்கு கிடைக்காத காலங்களில் கீரை வகை உணவைப் பயன்படுத்துகின்றனர். காடுகளிலும் சமவெளிகளிலும் கிடைக்கக்கூடிய பொன்னாங்கன்னிக் கீரை, பாலக்கீரை, தக்காளி கீரை, முள்ளங்கிகீரை, முள்ளுக்கீரை, மொடக்கத்தான் கீரை போன்ற கீரை வகைகளை உணவுக்காகப்*
*பயன்படுத்துகின்றனர்.*

***கிழங்கு வகைகள்***

*பணியர்கள் காட்டுப் பகுதிகளிலும் சமவெளிப் பகுதிகளிலும் கிடைக்கக்கூடிய கிழங்கு வகைகளைச் சேகரித்து உண்கின்றனர். வயல் வெளிகளில் விவசாயிகள் விவசாயம் செய்து அறுவடை செய்தபின்னர் அவர்களுக்குத் தெரியாத எஞ்சிய கிழங்குகளைக் கடப்பாரை கொண்டு தோண்டி எடுத்து உணவிற்குப் பயன்படுத்தும் போக்குக் காணப்படுகின்றது. அந்த வகையில் மரவள்ளிக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, கருணைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகள் உணவுப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன.*

***அரசியல்***

*தொடக்ககாலத்தில் பணியர்கள் பிற இனமக்களில் ஒரு நிலவுடைமையாளரிடம் தங்களது குறைகளைக் கூறி தங்களது சிக்கல்களைச் சரி செய்து கொண்டனர். ஆனால் பணியர்கள் தற்காலத்தில் தங்களுக்கென ஓட்டுரிமை பெற்று வார்டு தேர்தல்களில் நின்று தனியாகத் தங்களுக்கென்று ஓட்டுப்போட்டுத் தலைவரைத் தேர்ந்தெடுத்துப் பிற இனமக்களைப் போல் அரசியலில் பங்கெடுத்து வருகின்ற நிலையினைக் களப்பகுதியில் காணமுடிகிறது.*

***வீடு கட்டும் முறைகள்***

*பணியர்கள் வீட்டை 'குடி' என்று அழைக்கின்றனர். இவர்களின் வீடுகள் சதுரமான தரையமைப்பும், நான்கு பக்க சாய்தளக் கூரையையும் கொண்டு கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊரிலும் சுமார் முப்பது முதல் நாற்பது வீடுகள் கட்டப்பட்டிருக்கும், வீடுகள் தனித்தனியாகக் கட்டப்பட்டிருக்கும் மேலும் உயரம் குறைவாக வைத்துக் கட்டப்படுகிறது. "வீடுகட்ட ஒரு சமமான பகுதியைத் தேர்வு செய்கின்றனர். அவ்விடத்தில் இரண்டடி உயரத்திற்கு அங்கு கிடைக்கும் செம்மண் கொண்டு சதுரமான ஒரு மேடை கட்டுவார்கள். மேடை சுவர் பதினைந்தடி அகலமும் பதினைந்தடி நீளமும் கொண்டதாகக் கட்டப்படும். இவர்கள் வாழும் பகுதி குளிர்நிலமாகையால் பூமியில் ஈரப்பதத்திலிருந்து தற்காத்துக் கொள்ளவும், மழைநீர் வீட்டிற்குள் வராமலிருக்கவும் மேடை அமைக்கின்றனர்.*

*வீட்டுக் கூரை வாசலின் பெரும் பகுதியை மறைக்குமாறு தாழ்த்திக் கட்டப்படுவதால் நிலமட்டத்தில் வீட்டுச்சுவர்களைக் கட்டினால் வீட்டினுள் மிகவும் குனிந்துதான் போகவேண்டியிருக்கும் என்பதாலும் மேடை அமைக்கின்றனர். அம்மேடையானது இரண்டு அடி உயரம் வைத்துதான் கட்டப்படுவதால் வாசல் அமைக்கப்படும் இடத்திற்கு நேர் மட்டத்தில் படிக்கட்டு ஒன்று கட்டுவார்கள். மூங்கில் மண் இவைகளை கொண்டுத்தான் சுவர்கள் கட்டப்படுகின்றன. மேற்கூரைப்பகுதி மலைப்பகுதியில் கிடைக்கும் வரகு*

*வைக்கோலாலும் வேயப்பட்டிருக்கும். பொதுவாக பணியர்கள் வீடு ஒரு அறையுடையதாகவும் ஒரு திறந்த வெளி வராண்டாவும் உடையதாக இருக்கும்."*[17]

*அறைக்கு நீள அகல உயரங்களில் அளவுகள் கிடையாது. ஓர் அறையே படுக்க, உணவு உண்ண, சாமிகும்பிட எனப் பலவகையிலும் பயன்படுத்தப்படுகிறது. அறையின் நிலப்பரப்பு செம்மண் கலவையால் பூசப்பட்டிருக்கும். எனவே பணியர்களின் கூரை பார்ப்பதற்கு கூம்பு வடிவில் தோன்றும்.*

**தொழில்**

*பணியர்களின் முதன்மையான தொழில் விவசாயம் ஆகும். பழைய காலங்களில் மவுண்டான் செட்டியர் வீடுகளில் இவர்கள் விவசாய வேலைக்குச் செல்வர். அங்கு பணத்திற்கு பதிலாக நெல் கொடுப்பார்கள். அதற்கு 'வல்லி' என்று பெயர். இன்றைக்குப் பெரும்பாலானோர் கூடலூர் மற்றும் பந்தலூர், உதகை பகுதியில் உள்ளவர்கள் ஆண்கள் தோட்டத்தில் வேலை பார்த்தும் பெண்கள் வீடுகளில் வேலை செய்தும் வருகின்றனர்.*

***பணியர் இன மக்களின் எதிர்பார்ப்புகள்***

- *பழங்குடியின பணியர் இனமக்களுக்கு தங்கள் வாழும் பகுதியில் சொந்தமாக வீடு கட்டித்தருதல், கழிப்பிட வசதி, தண்ணிர் தொட்டி அமைத்தல் போன்ற வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும்.*
- *அரசாங்கங்கள் சிறுதொழில்களைத் தொடங்குவதற்கு ஏதுவாக கடன் வசதிகளை ஏற்படுத்தித்தருதல் வேண்டும்.*
- *பழங்குடியின பணியர் இனமக்களுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து அரசின் சலுகைகளும் முழுமையாகக் கிடைத்தல் வேண்டும்.*
- *அடர்ந்த காடுப்பகுதியில் பொருட்களைச் சேகரிக்க தடை இருத்தல் கூடாது.*
- *கல்வியில் தரமேம்பாடு ஏற்பட வழிவகை செய்துதர அரசு முன்னுரிமை வழங்க வேண்டும்.*
- *வீடுகளில் மின்சார வசதி இலவசமாக அமைத்துத் தர வேண்டும் போன்றவை பணியர் இன மக்களின் எதிர்ப்பார்ப்புகளாகும்.*

***அரசு செய்ய வேண்டிவை***

- *மலைவாழ் பகுதியில் இருக்கின்ற படித்த ஆசிரியர்களை அதே பகுதியில் பணி நியமனம் செய்ய வேண்டும்.*
- *பழங்குடியின, அரசு உண்டு உறைவிடப்பள்ளிகள் பெரும்பான்மையான பழங்குடிகள் வாழும் பகுதியில் அதிக அளவில் அமைக்க வேண்டும்.*
- *மலைவாழ் பழங்குடியின மாணவர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகளில் 'வழிகாட்டல் மையம்' அமைக்க வேண்டும்.*
- *மலைப்பகுதியில் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதினால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது. இதனால் ஆசிரியர் இடமாற்றம் மலைப்பகுதியில் தடை செய்ய வேண்டும்.*
- *பள்ளி வளாகத்திலும், அரசு உண்டு உறைவிடப்பள்ளி வளாகத்திலும் வன விலங்குகளிடமிருந்து மாணவர்களை பாதுகாப்பதற்காக இருப்பு நுழைவாயிலுடன் நான்கு புறமும் இரும்பு வேலியுடன் கூடிய சுற்றுச்சுவர் அமைத்துத்தர வேண்டும்.*

***பணியர் இன மக்களின் எதிர்பார்ப்புகள்***

- *பழங்குடியின பணியர் இனமக்களுக்கு தங்கள் வாழும் பகுதியில் சொந்தமாக வீடு கட்டித்தருதல், கழிப்பிட வசதி, தண்ணிர் தொட்டி அமைத்தல் போன்ற வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும்.*
- *அரசாங்கங்கள் சிறுதொழில்களைத் தொடங்குவதற்கு ஏதுவாக கடன் வசதிகளை ஏற்படுத்தித்தருதல் வேண்டும்.*
- *பழங்குடியின பணியர் இனமக்களுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து அரசின் சலுகைகளும் முழுமையாகக் கிடைத்தல் வேண்டும்.*
- *அடர்ந்த காடுப்பகுதியில் பொருட்களைச் சேகரிக்க தடை இருத்தல் கூடாது.*

- *கல்வியில் தரமேம்பாடு ஏற்பட வழிவகை செய்துதர அரசு முன்னுரிமை வழங்க வேண்டும்.*
- *வீடுகளில் மின்சார வசதி இலவசமாக அமைத்துத் தர வேண்டும் போன்றவை பணியர் இன மக்களின் எதிர்ப்பார்ப்புகளாகும்.*

**முடிவுரை**

*நீலகிரி மாவட்டத்தில் 'மண்ணின் மைந்தர்கள்' என பழங்குடியின மக்களை அழைக்கின்றனர். பணியர் இமைக்கள் கூடலூர் வட்டாரத்தில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். பணியர் என்ற சொல்லுக்கு 'வேலை செய்பவர்' என்று பொருளாகும். பணியர் இனமக்கள் நீக்ராயிட் மரபைச் சார்ந்தவர்களாகவும் கருமை நிறமும், சுருண்ட மயிரும், தட்டையான மூக்கும், தடித்த உதடும். உடையவர்களாக காணப்படுகின்றனர்.*

*பணியர் இனப்பெண்கள் வெண்ணிறத் துணியினால் மேற்பகுதியைப் போர்த்திக் கொள்கின்றனர். இடுப்பில் பெலிட் போன்ற கருப்புத்துணியையும், காதில் பெரிய துளை செய்த பனை ஒலையையும் அணிகலன்களாக அணிகின்றனர். பண்டைய காலத்தில் வயநாடு செட்டி, மவுண்டாடன், செட்டியாரிடம் மிகவும் பற்று உடையவராகவும், இருப்பார்கள். அரசு வழங்கும் சலுகைகள் சரிவரக் கிடைக்காததால் பணியரினப் பிள்ளைகள் கல்விபெற இயலவில்லை. ஆகவே அவர்களுக்குரிய சலுகைகள் அவர்களைச் சென்றடைய அரசு தக்க நடவடிக்கை எடுத்தால் அவர்கள் கல்விநிலையில் உயர வாய்ப்புண்டு என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.பணியர்கள் உணவு இல்லாமல் கூட இருந்து விடுவார்கள் ஆனால் வெற்றிலை இல்லாமல் இருக்க மாட்டார்கள். நெல் அறுவடை விழாவானது வருடந் தோறும் ஐப்பசி மாதத்தில் 10-ஆம் தேதி அன்று புத்தரி திருவிழா (நெல் அறுவடை) என்ற பெயரில் நடைபெறுகிறது. விசு பண்டிகை அன்று பணியர்கள் கொன்றைப் பூவை கோயிலுக்கு எடுத்துச் சென்று பூஜை செய்த பின் மவுண்டான் செட்டியார் வீட்டிற்குச் சென்றை பூவினைக் கொடுக்கின்றனர். மக்கள் நடமாட்டம் இல்லாத காடுமேடுகளில் வாழும் நண்டுகளைப் பிடித்தும் அதனை வெண்நீரில் போட்டு சுத்தம் செய்து, மேலும், அதனை அம்மியில் அரைத்து அதன் சாற்றை ரசம் வைக்கின்றனர். பணியர்களின் இசைக்கருவிகளான துடி, மத்தளம், மங்கெ, தவில், பொரே, கொகாலு போன்றவைகளாகும். நூலாலான கருவிகள், முயல்கண்ணி, அணிப்பிள்ளைக்கண்ணி, உடும்புக்கண்ணி, கீரிப்பிள்ளைக் கண்ணி ஆகியவற்றைக் கொண்டு வேட்டையாடிய இறைச்சியை உண்கின்றனர். அடர்ந்த காடுகளில் கிடைக்கின்ற இறைச்சி வகைகள், கீரை வகைகள், கிழங்கு வகைகள் போன்றவற்றை உணவாக உட்கொள்கின்றனர்.*

**ஆய்வு அணுகுமுறை**

*களஆய்வு அணுகுமுறை, வரலாற்று ஆய்வு அணுகுமுறை, விளக்க அணுகுமுறை.*

**மேற்கோள்**


1. *காமராசு.கா., (2014) – பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு, ப.4*
2. *செம்பான், வயது-53, கொளப்பள்ளி, நா.: 22.10.2014*
3. *வெள்ளச்சி, வயது - 38, கோத்தர்வயல் (பணியர்பாடி), நா.: 15.10.2015*
4. *மணிமேகலை, கா.11 பா.வ.95-96*
5. *புறம்., பா.18*
6. *நாலடி., பா.131*
7. *நான்மணி., பா.38*
8. *காளியம்மாள், வயது - 38, கரியசோலை, நா.: 10.06.2016*
9. *முத்தம்மாள், வயது - 62, புறமன்னவயல் (பணியர்பாடி), நா.: 02.05.2016*
10. *ஐப்பசி மாதம் 10 தேதி, கள ஆய்வு செய்யும்போது நிகழ்ச்சி நேரிடை, நா.:26.10.2016, நேரம்: 10 மணி முதல் 2 மணி வரை.*
11. *மணிகண்டன், வயது - 33, நம்பாலக்கோட்டை (பணியர்பாடி) நா.: 23.10.2016*
12. *தேவி, வயது - 42, நெலாக்கோட்டை, நா.: 25.10.2016*

13. அங்கம்மா, வயது - 59, குந்தலாடி, நா.: 28.10.2016
14. அழகன், வயது - 43, இரும்புபாலம், நா.: 12.11.2016
15. மணிகண்டன், வயது - 33, நம்பாலக்கோட்டை (பணியர்பாடி), நா.: 29.10.2016
16. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.112
17. ராம், வயது - 38, பாக்கனா, நா.: 18.08.2017

**துணை நின்ற நூல்கள்**


1. இராமசுப்பிரமணியன்.வ.த., (2008) – நாலடியார் (மூலமும் உரையும்), திருமகள் நிலையம் புதிய எண் - 16, பழைய எண் - 55, வெங்கட்நாராயணா ரோடு, தியாகராய நகர், சென்னை – 600 017.
2. காமராசு.கா., (2014) – பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு – உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் , இரண்டாம் முதன்மை சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை - 600 113.
3. துரைசாமிப்பிள்ளை. ஔவை.சு., (1996) – புறநானூற்று உரை, கழக வெளியீடு, 154 - டி.டி.கே.சாலை, சென்னை - 18.
4. புலியூர் கேசிகன்., (2003) – மணிமேகலை(மூலமும் உரையும்), சென்னை புக்ஸ்,58, கிருஷ்ணா நகர், ஆறாவது தெரு, மடிப்பாக்கம், சென்னை - 600 019.


**பணியர் இன மக்ககளின் இசைக் கருவிகள்** **புத்தரி திருவிழா (நெல் அறுவடை)**



